# அவ்விதம் சேவை புரிந்த மருத்துவர்களுகென தேவன் ஒரு இடத்தை வைத்துள்ளார் என்று உங்களுக்கு தெரியுமா?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

12. இங்கு அழகான அநேக தாய்மார்கள் அமர்ந்துள்ளனர். அவர்களில் சிலருக்கு அறுபது, எழுபது வயது ஆகிவிட்டது. அவர்கள், "சகோ. பிரான்ஹாமே, நாங்கள் என்னத்தை சாதித்து விட்டோம்?" என்று கேட்கலாம். நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்த்தீர்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று குறிக்கப்பட்டிருந்ததோ, அதை செய்தீர்கள்.

வயதான தகப்பன்மார்கள் சிலர், "நாங்கள் நிலத்தை உழுது பண்படுத்தினோம். நாங்கள் அதையெல்லாம் செய்தோம். ஆனால், நாங்கள் பிரசங்கம் செய்யவில்லை," எனலாம். தேவன் உங்களை எதற்காக அனுப்பினாரோ, அதை பிழையின்றி செய்தீர்கள். எனவே, உங்களுக்கு பரலோகத்தில் ஒரு இடம் உண்டாயிருக்கும்.

13. நேற்று ஒரு வயோதிப மருத்துவ நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அவருக்கு எண்பது வயது நிரம்பிவிட்டது. அவருடைய மைத்துனி இன்றிரவு சபைக்கு வந்திருக்கிறாள். அவரைக் குறித்து அவள் சற்று

கவலை கொண்டிருந்தாள். எனவே, அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். நான் அவருடன் உரையாடிக் கொண்டிருந்த போது அவருடைய முகம் பிரகாசமுற்றது. அநேக ஆண்டுகளுக்கு முன்பு கொலராடோவில் அவர் வேட்டையாடின சம்பவம் ஒன்றை என்னிடம் கூறிக் கொண்டிருந்தார். அங்கு தான் நானும் வேட்டைக்குச் செல்கிறேன். அவருடைய முகம் மிகவும் பிரகாசிக்க தொடங்கினது. நான் அவரிடம், "எவ்வளவு காலமாக நீங்கள் மருத்துவத் துறையில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"நீ பால் குடிக்கும் குழந்தையாயிருந்த முதற்கொண்டே" என்று அவர் பதிலளித்தார். மேலும் அவர், "அநேகமுறை நான் என் குதிரையில் சேணம் கட்டி, சிகிச்சைக்கு வேண்டியவைகளை தோள் பையில் எடுத்துக் கொண்டு, அதை தொங்கவிட்டுக் கொண்டு சென்றதுண்டு. அநேகமுறை நான் நடந்தும் கூட சென்றதுண்டு" என்றார்.

நான், "ஆம், நீரோடைகளின் கரைகளில், அதிகாலையில் இரண்டு மணிக்கு, கையில் டார்ச் விளக்கைப் பிடித்து கொண்டு சென்று வயிற்று வலியால் அவதியுற்ற ஒரு சிறு குழந்தைக்கோ அல்லது பிரசவ வேதனை கொண்டிருந்த ஒரு

பெண்ணுக்கோ அவர்கள் வீட்டைத் தேடிக்கண்டு பிடித்து வைத்தியம் பார்த்திருப்பீரே" என்றேன்.

"அது உண்மை" என்றார் அவர்.

14. நான், "டாக்டர், அழிவையும் அழியாமையும் பிரிக்கும் அந்த கோட்டிற்கு அப்பால், அவ்விதம் சேவை புரிந்த மருத்துவர்களுகென தேவன் ஒரு இடத்தை வைத்துள்ளார் என்று உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டேன்.

அவருடைய கண்களில் கண்ணீர் மல்கியது. அவர் அழத் தொடங்கினார். அவர், தமது பலவீனமான கரங்களை நீட்டி என்னைப் பிடித்து கொண்டு, "அப்படி இருக்கலாம் என்று நம்புகிறேன்" என்றார். இந்த தேசத்திற்கு அப்பால், தேவன் ஒரு மனிதனின் ஆத்துமாவின் தன்மையை ஆராய்ந்தறிகிறார்.

பின்பு நான் அவருக்கு இந்த திருப்தியளிக்கும் வேதவாக்கியம் ஒன்றை கூறினேன். அநேகமுறை சேறு நிறைந்த வயல்களின் வழியாக இரவில் நடந்து சென்று, யாருக்காகிலும் ஒருவருக்கு உதவி செய்ய முயன்று, அதற்காக காசு வாங்காமல் அவர் இருந்திருக்கக்கூடும். பரவாயில்லை. **நான்**

**அவரிடம், “இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்” என்று இயேசு வேதத்தில் கூறியுள்ளார்” என்று சொன்னேன்.** அது உண்மை.

★★★★★